

## மத்திய அரசு 1993-ம் ஆண்டு தடை விதித்த
## மனிதன் மலத்தை மனிதர் அகற்றும் நிலை
## மீண்டும் நடைமுறையில் உள்ளதை
## கண்டித்து...





**மாநிலம் தழுவிய**

**நவ : 28 - 2005**

# இரயில் மறியல்

**எஸ்.டி.கே. (எ) தி. தொல்காப்பியன்** (மாநில தலைவர்) **தலைமையில்...**

இழிவுகளில் புதையும் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலையை
வென்றெடுக்க களத்திலே கூடிடுவோம்...

**காலை 10.00 மணி – இரயில் நிலையம், எழும்பூர்**

## ஆதித்தமிழர் பேரவை

**சென்னை மாவட்டம்**





மனிதகுல மாண்புகளுக்கெதிராக...
மனிதர் கழிவை மனிதர் அகற்றும்
சமூக அவலம் போக்கிடக் கோரி...



**நவ. 28-ல்**

## மாநிலம் தழுவிய

# இரயில் மறியல்

**வறுமையும், கொடுமையும் உடமையென வாழும்**
**ஒடுக்கப்பட்ட மக்களின் இழிநிலையை போக்கிட,**
**மனிதநேயமுள்ள அனைவரையும் கரம் கோர்த்திட அழைக்கின்றோம்.**

**காலை 11.00 மணி / சேலம் இரயில்நிலையம்**

## ஆதித்தமிழர் பேரவை

சேலம், நாமக்கல் மாவட்டங்கள்.

தொடர்புக்கு :
93620-23283

நிலா ✆ : 2258503 Cell : 94430-45155



# மனிதர் கழிவை மனிதர் அகற்றும் அவலம் போக்கிட கோரி...



## நவம்பர் 28ல்

மாநிலம் தழுவிய



# இரயில் மறியல்

இடம் : ஒட்டன்சத்திரம் இரயில் நிலையம்

மனித நேயமுள்ள எவரும் பொறுத்துக்கொள்ள முடியாத இழிவுகளிலிருந்து நம் சொந்தங்களை மீட்க உணர்வுள்ள அனைவரையும் உரிமையோடு அழைக்கிறது.

## ஆதித்தமிழர் பேரவை

திண்டுக்கல் மாவட்டம்.

JMD மாடர்ன் கம்ப்யூட்டர் பிரிண்டர்ஸ், 69, அண்ணா வணிக மையம், திண்டுக்கல். ☎ 2423259



மத்திய அரசு 1993-ம் ஆண்டு தடை விதித்த
மனிதன் மலத்தை மனிதர் அகற்றும் நிலை
மீண்டும் நடைமுறையில் உள்ளதை
கண்டித்து...





நவ 28-2005

மாநிலம் தழுவிய

# இரயில் மறியல்

தலைமை :

சோ.மு. முத்துவீரன்
(கிழக்கு மாவட்ட தலைவர்)

சுக்கம்பாளையம் இல. பழனிச்சாமி
(கிழக்கு மாவட்ட செயலாளர்)

இழிவுகளில் புதையும் ஒடுக்கப்பட்ட மக்களின்விடுதலையை
வென்றெடுக்க களத்தில் கூடிடுவோம்...


காலை 10.00/இரயில்நிலையம், சோமனூர்

ஆதித்தமிழன்
மாத இதழ்
படியுங்கள்

ஆதித்தமிழர் பேரவை, கோவை மாவட்டம். (கிழக்கு)

தொடர்புக்கு : 98651-27750, 93442-27285





இரயில் நிலைய இருப்புப்பாதைகளில் மனிதர் கழிவை,
மனிதர் கையால் அகற்றும் அவலத்தை போக்கக் கோரி,
ஒடுக்கப்பட்டோரின் விடுதலை போராளி அய்யா

# இரா. அதியமான்

நிறுவனத் தலைவர் அவர்கள் ஆணைக்கிணங்க

**2005 நவம்பர் 28ல், தமிழகத்தில்**

**ஆதித்தமிழர் பேரவை முன்னெடுக்கும்**

# இரயில் மறியல் போராட்டம்

இடம் : விருதுநகர் இரயில் நிலையம் — நேரம் : காலை 10–00 மணி

**தலைமை :**

வே. கருப்புச்சாமி (எ) **சாக்கியன்,** மாவட்ட செயலாளர்

**முன்னிலை :**

| | | |
|---|---|---|
| **கு.பா. வீரக்கனல்** | **சு.விசயராசன்** | **எஸ். சுந்தர்ராஜன்** |
| மாவட்ட தலைவர் | மாவட்ட துணைத் தலைவர் | மாவட்ட துணைச் செயலாளர் |
| தோழர். **சுப்பையா** | **பாண்டியம்மாள்** | **கி.முத்து** |
| ஒன்றிய செயலாளர் (சிவகாசி) | மாவட்ட மகளிரணி செயலாளர் | மகளிரணி செயலாளர் (திருவி.) |

**சிறப்பு அழைப்பாளர் :**

விடியல் **வீரப்பெருமாள்,** மாநில தொண்டரணி செயலாளர்

சமூக அவலத்தை நீக்க, மனித உரிமை மீட்டெடுக்க, மறியல் போராட்டம் வெற்றி பெற
ஆதித் தமிழர்களே அணி திரண்டு வாருங்கள்!

## ஆதித் தமிழர் பேரவை, விருதுநகர் மாவட்டம்

*கிளர்ச்சி செய்யாமல் மலர்ச்சி கிடையாது.*

தொடர்புக்கு :
: 9865281629, 9367410915

சன் கம்ப்யூட்டர் ஆப்செட் பிரஸ், ஸ்ரீவி., ☎: 266609

# மனிதர் கழிவை மனிதர் அகற்றும் அவலம் போக்கிட கோரி...




## நவம்பர் 28ல்

மாநிலம் தழுவிய

# ரயில் மறியல்





தோழமை மிக்க சொந்தங்களே!

உலகில் எங்கும் இல்லாத பிறவிப்பேதம் (சாதியம்) ஆட்சிபுரிகின்ற இந்தியாவில்தான் இன்றளவும் மனிதனுடைய மலத்தை மனிதன் அள்ளிச் சுமக்கின்ற கொடுமையும், துப்புரவுத் தொழில் புரிந்து மக்களைக் காக்கின்ற மனித நேயப் பணியாளர்களாகிய தூய்மைத் தொழிலாளர்களை சாதியின் பெயரால் இழிவாய் நடத்துவதும் இங்கு மட்டுமே நிலவும் அவலமாகும்.

பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் பேசுவதைக் கூட மறுகணமே கேட்கும் செல்போன் போன்ற நவீன தொழில்நுட்பம் வளர்ந்துள்ள விஞ்ஞான யுகத்தில் இன்றும் கூட **பாதாளச் சாக்கடை, கழிவுநீர்த்தொட்டி, கழிவறைத் தொட்டி, வாறுகால்** போன்றவற்றை (அடைப்பு) சுத்தம் செய்ய எவ்வித **உயிர்பாதுகாப்பு சாதனமுமின்றி சக மனிதனையே உள்ளாடை (ஜட்டி) யுடன் உள்ளே இறக்குவதும் கைகளால் அத்துனை கழிவுகளையும் அகற்ற வைப்பதும் மனித மாண்பை அவமதிக்கும்** செயல்களாக இந்தியாவில் மட்டுமே உள்ளது.

இந்தியா ஒளிர்கிறது. வல்லரசு நாடாகப் போகிறது என வாய்க் கூசாமல் பேசிவரும் ஆளும் வர்க்கப் பார்ப்பன முதலாளித்துவக் கூட்டத்தின் ஆட்சியில் மொத்தப் பொருளாதாரத்தின் பெரும் பகுதியை விழுங்கிக் கொண்டு நாட்டைக் காக்கிறோம் எனப் பிதற்றும் இராணுவத்தினர் தான் கடந்த டிசம்பர் 26.05 அன்று உலகை உலுக்கிய **ஆழிப் பேரலை [சுனாமி]** யில் உயிரிழந்த **மனித சடலங்களை அப்புறப்படுத்த**

**மறுத்துவிட்டனர்.** இச்சூழலில் தமிழகமெங்குமுள்ள தூய்மைப் பணியாளர்களே அழுகிய மனித உடல்களை அகற்றி மனித மாண்பை காத்தனர். இத்தொழிலாளர்களின் வாழ்வை மாற்றியமைக்கும் விதமாக கடந்த டிசம்பர் 26 அன்று **கோவையில் தூய்மைத் தொழிலாளர் மறுவாழ்வு மாநாட்டில்** 21 தீர்மானங்களை நிறைவேற்றி அரசுக்கு கோரிக்கையாக வைத்து இந்தியாவிலுள்ள துப்புரவுத் தொழிலாளர்களின் அவல நிலையை **ஐக்கிய நாடுகள் அவைக்கும்** கொண்டு சென்றது **ஆதித்தமிழர் பேரவை.**

இதன் தொடர்ச்சியாக மனிதக் கழிவுகளைக் கையால் அகற்றும் கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைக்க கடந்த ஆகஸ்ட் மாதமே **பிரதமர் மன்மோகன்சிங் அரசு கெடு** விதித்திருந்தது. அதிலும் குறிப்பாக ரயில்வே துறையில் இதை முதலில் ஒழிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தது. ரயில்வே துறையை நவீன படுத்துவதற்கு 24,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்நவீனத்திட்டத்தில் மனிதக் கழிவுகளை மனிதனே அகற்றும் கொடுமையை அகற்ற எந்த திட்டமும் இல்லை. அது மட்டுமல்ல "இதை முழுவதுமாக ஒழிக்க - எந்த காலக் கெடுவும் வைக்க முடியாது" என்று ரயில்வே அமைச்சகம் சமூகநீதி மற்றும் அதிகாரப்படுத்தும் அமைச்சகத்திற்கு தெரிவித்துள்ளது.

ஒவ்வொரு துறையையும் வெளிநாடுகளில் உள்ளது போல் நவீனப்படுத்தி தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தும், அரசும், ஆட்சியாளர்களும் மனிதஇனமே வெட்கித் தலைகுனியும் இச்செயலை தடுக்க **1993ல் இயற்றப்பட்ட சட்டம்** இருந்தும் நடைமுறைப்படுத்த தயங்குகின்றனர். காரணம் இத்தொழிலில் (தலித்துகள்) **அருந்ததியர்கள்** நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். மத்திய அரசே இச்சட்டத்தை கேலிக்குரியதாக்குகிறது.

இச்சட்டத்தை நடைமுறைப்படுத்தி மனிதர் மலத்தை மனிதர் அள்ளும் கொடுமையை போக்கிட நவம்பர் 28ல் நடைபெறவுள்ள **ரயில் மறியல் போராட்டத்தில்** சமூகநீதி சொந்தங்கள் அனைவரும் கலந்து கொண்டு மனித மாண்பை காத்திட ஆதரவுதந்து போராட்டம் வென்றிட அழைக்கின்றோம்.

**மனித நேயமுள்ள எவரும் பொறுத்துக் கொள்ளமுடியாத இழிவுகளிலிருந்து நம் சொந்தங்களை மீட்க உணர்வுள்ள அனைவரையும் உரிமையோடு அழைக்கிறது.**

# ஆதித்தமிழர் பேரவை

## நெல்லை மண்டலம்

**க. கண்ணன்**
மாநில நிதிச்செயலர்
தொலைபேசி : 0461 - 2336252

**நெல்லை முத்துமாரி**
மாநில மகளிரணி தலைவர்
செல் : 9842024784

**சொ.சு. தமிழினியன்**
மாநில துணைச் பொதுச்செயலாளர்
தொலைபேசி : 04639-281400

**சு.க. சங்கர்**
தென்மண்டல செயலாளர்
செல் : 9363314198